# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1993 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க,

## காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்

---

*[1993, மார்ச் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1993, ஏப்பிறில் மாதம் 02 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

---

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

விலை : சதம் 60 — தபாற் செலவு : ரூபா 1.00

1993 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்.

[1993, மார்ச் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ 46/88

காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

464 ஆம் அத்தியாயத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவானது "பற்று நிலம்" எனும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என்பது (401 ஆம் அத்தியாயமான) தேசிய வீடமைப்புச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனம் என்று பொருள்படும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 23ஆ எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அ எனும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 23ஆ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"ஆட்களின் தெரிவுசெய்தலைத் தள்ளுபடி செய்வதற்கு காணி ஆணையாளருக்குள்ள தத்துவம்.

23ஆ. காணி ஆணையாளர், அரச காணியைப் பராதீனப்படுத்துவதற்கான ஓர் ஆளினைத் தெரிவுசெய்தல் பற்றிய அறிவிப்புத் தேதியிலிருந்து ஓராண்டுக்குள் காணி ஆணையாளரின் அபிப்பிராயப்படி அத்தகைய ஆள் அத்தகைய காணியை அபிவிருத்தி செய்யத் தவறியிருந்தால் அல்லது அசட்டை செய்திருந்தால் அல்லது அத்தகைய காணியில் வதியத் தவறியிருந்தால் அத்தகைய தெரிவைத் தள்ளுபடி செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"மானியக் கொடைமூலம் பாராதீனப்படுத்தப்பட்டு பிணையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட காணி நீதிமன்றக் கட்டளையின் மீது கைப்பற்றப்படலாம்.

39. ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்வையை நிறைவேற்றுகையில் அனுமதிப்பத்திரமொன்றின்மீது அல்லது மானியக்கொடையின்மீது பராதீனப்படுத்தப்பட்ட காணி எதுவும் கைப்பற்றப்படுதலாகாது :

ஆயின், இப்பிரிவினது முற்போந்த ஏற்பாடுகள், இக் கட்டளைச் சட்டத்தினால், அனுமதிக்கப்பட்ட அக்காணியின், மீதான ஈட்டை வலுவுறுத்துவதில் மானியக்

கொடையின்மேல் பாரதீனப்படுத்தப்பட்ட காணியைக் கைப்பற்றுவதற்கும் விற்பனை செய்வதற்கும் ஏற்புடையனவாதலாகாது :

ஆயின், மேலும், மானியக்கொடையின்மேல் பாரதீனப்படுத்தப்பட்ட காணி எதுவும், ஏதேனும் நீதிமன்றத்தின்முன் தவறொன்றிற்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் எவரையும் விடுவிப்பதற்கான பிணையாக ஏற்றுகொள்ளப்பட்டுள்ளவிடத்தும் அத்துடன் அத்தகைய ஆள் அத்தகைய நீதிமன்றத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக சமுகமளிக்காதவிடத்தும், அத்தகைய நீதிமன்றத்தினால் பிணையாக நிர்ணயிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தொகையை அறவிடுவதற்காக, அத்தகைய காணியானது கைப்பற்றப்பட்டு விற்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 41அ எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

5. பின்வரும் புதிய பிரிவானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 41அ எனும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

"வங்கிகளாலும் விதித்துரைக்கப்பட்ட நிறுவனங்களாலும் கைப்பற்றப்படுதலும் விற்கப்படுதலும்.

41அ. இவ்வத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும், மக்கள் வங்கியினால், அரச ஈட்டு, முதலீட்டு வங்கியினால், இலங்கை வங்கியினால், இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்தினால், இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கியினால், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால், வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்தினால் அல்லது பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்றினால் அல்லது வேறு விதித்துரைக்கப்பட்ட நிறுவனத்தினால் அத்தகைய வங்கியை கூட்டுத்தாபனத்தை, அதிகாரசபையை, சங்கத்தை அல்லது நிறுவனத்தைத் தாபிப்பதனை ஏற்பாடு செய்யும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க விடயத்துக்கேற்றவாறு அத்தகைய வங்கியின் கூட்டுத்தாபனத்தின் அதிகாரசபையின் சங்கத்தின் அல்லது நிறுவனத்தின் சார்பாக நிறைவேற்றப்பட்ட அக்காணி மீதான ஈடொன்றை வலியுறுத்துவதற்காக மானியக் கொடையொன்றின் மீது பாரதீனப்படுத்தப்பட்ட ஏதேனும் காணி கைப்பற்றப்படுவதை அல்லது விற்பனை செய்யப்படுவதைத் தடை செய்வதாகக் கருதப்படுதலாகாது.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவானது, அப் பிரிவின் (ஆ) எனும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஆ) அரச ஈட்டு முதலீட்டு வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், பதிவு செய்யப்பட்ட ஏதேனும் சங்கம் அல்லது விதித்துரைக்கப்பட்ட வேறு நிறுவனம் தவிர்ந்த ஆள் எவருக்கும் அத்தகைய பற்றுநிலத்தை ஈடுவைத்தலாகாது.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம், 107 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம், 107 ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

"அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனை மீறப்பட்டுள்ள விடத்து அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கான அறிவித்தல்.

106. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒருவர், அனுமதிப்பத்திரத்தின் ஒரு நிபந்தனையைக் கடைப் பிடிக்கத் தவறியுள்ளார் என அரசாங்க அதிபருக்குத் தோன்றினால், அரசாங்க அதிபர் ஓர் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு தேதியன்றும் ஓரிடத்திலும் மீறுகைக்கான போதிய காரணத்தை அரசாங்க அதிபருக்குக் காண்பித்தாலன்றி, அவரின் அனுமதிப்பத்திரமானது இல்லாதாக்கப்படும் என அறிவித்து, அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அத்தகைய அறிவித்தலை வழங்கலாம்.

காரணம் காட்ட அனுமதிக்கப்பட்ட காலப்பகுதி.

107. பிரிவு 106 இன் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியானது அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவருக்கு அத்தகைய அறிவித்தலானது வழங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு குறைந்ததாகவிருத்தலாகாது.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 118அ எனும் பிரிவானது "23அ எனும் பிரிவின்கீழ் வேறுபடுகின்ற" எனும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "23அ, 23ஆ எனும் பிரிவுகளின்கீழ் வேறுபடுகின்ற" எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.